செ.வெ.எண். 03/ஜூன் தேதி : 01.06.2016

## பத்திரிக்கை செய்தி

## தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

தர்மபுரி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இவ்வாண்டு ஆகஸ்ட் 2016-ம் ஆண்டு முதல் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**வயது வரம்பு :**

14 வயது முதல் 40 வயதுக்கு உட்பட்ட ஆண்,பொண் இருபாலரும் விண்ணப்பிக்க தகுதி உடையவர் ஆகிறார்கள்.

**கல்வி தகுதி :**

**8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்** : மின்கம்பியாள் (WIREMAN) (2 வருடம்), பற்றுவைப்பவர் (WELDER) (1 வருடம்).

**10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்** : கம்பியூட்டர் ஆப்ரேட்டிங் அன்டு புரோகிராமிங் அசிஸ்டண்ட் (COPA) (1 வருடம்), மின்பணியாள் (ELECTRICAN) (2 வருடம்), கட்டிட வரைவாளர் (DRAUGHTSMAN CIVIL) (2 வருடம்). பொருத்துநர் (FITTER) (2வருடம்). கம்மியர் மோட்டர் வண்டி (ஆஆஏ) (2 வருடம்), கம்மியர் டீசல் (MECHANIC DIESEL ENGINE) (1வருடம்), கடைசலர் (TURNER) (2வருடம்) ஆகிய தொழிற் பிரிவகளுக்கு ஆண். பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்கும் முறை :**

மேற்கண்ட தொழிற்பிரிவுகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்கண்ட இணையதள முகவரியில் 20.06.2016-க்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது..

WWW.skilltraining.tn.gov.in

இது மாவட்ட அளவில் நடத்தப்படும் கலந்தாய்வுக்கான விண்ணப்பம் ஆகும். அனைத்து மாவட்டங்களிலும் சேர்க்கை ஆனது கலந்தாய்வு மூலம் ஒரே நாளில் நடத்தப்படும் விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் விண்ணப்பிக்க விரும்பினால் ஒவ்வொரு மாவட்டத்திற்க்கும் தனிதனியாக விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். இதர விவரங்கள் அனைத்தும் WWW.skilltraining.tn.gov.inமூலம் தெரிந்துக்கொள்ளலாம்.

பயிற்சி காலத்தின் போது பயிற்சியாளர்களுக்கு மாதந்தோரும் ரூ.500/- உதவித் தொகையாக வழங்கப்படும், இதை தவிர விலையில்லாபாடபுத்தகம்,விலையில்லா மடிகணினி,விலையில்லா சீருடை,விலையில்லா மிதிவண்டி,விலையில்லா பேருந்து பயண அட்டை,விலையில்லா காலணி முதலான சலுகைகள் வழங்கப்படும். ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே விடுதி வசதி உண்டு.

எனவே தகுதியுள்ள அனைத்து மாணவ, மாணவியர்களும் தர்மபுரி அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயன் அடையுமாறு தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் விபரங்களுக்கு முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், தருமபுரி. தொலைபேசி எண். 04348 235323 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**